# கிருபையுள்ள வார்த்தை®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

VOL - 27
ஆண்டு சந்தா ரூ. 100/-

ஜூன் - JUNE
தனிப் பிரதி ரூ. 10/-

2026
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-

# நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்.

ஆபகூக் 3:18



இடம்: வைகை அணை - தேனி மாவட்டம்

ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை 3
பெண்கள் பகுதி 7
வாலிபர் பகுதி 9
சிறுவர் பகுதி 11
ஓராண்டில்... வேதவாசிப்பு


*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA** Ph.D.,


ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.S. (IT&M)., M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் **B.** கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் **V.** சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7.00 மணி**

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...**




மாதந்தோறும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி வழங்கப்படுகிறது.

**கிருபையுள்ள வார்த்தை**
கர்த்தர் நமக்கு கொடுத்துள்ள அழகான அர்த்தமுள்ள வாழ்வை வாழ வழிநடத்தும் வார்த்தை

YouTube
**@graciouswordcoc**

**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

# ஓர் அழகான மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கை

## A Beautiful and Meaningful Life



- P.C. பிலேமோன் ராஜா

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இனிதான வாழ்த்துக்கள். கர்த்தர் நமக்கு அழகான மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கையை கிருபையாக கையளித்துள்ளார். அதனை குறித்து இந்த மாதம் நாம் தியானம் செய்வோம்.

இந்த அண்டத்தினையும் அதிலுள்ள அனைத்தினையும் தமது வார்த்தையினால் உண்டாக்கிய கர்த்தர். மனிதனை மாத்திரம் சிறப்பாக தனது கரங்களினால், தனது சாயலின்படியே. தனது சுவாசத்தினை கொடுத்து அற்புதமாக படைத்தார். அப்படி உண்டாக்கிய மனிதர்களுக்கு (ஆதாம், ஏவாள்) அழகிய வாழ்வினை கையளித்தார். அதனை அர்த்தமுள்ள வாழ்வாக்க கட்டளையும் கொடுத்தார்; தூசு மற்றும் மாசற்றிருந்த இந்த உலகில், அவர்கள்; பாவமும், சாபமும் அற்றவர்களாக இருந்தனர்.

வாழ்வின் அர்த்தத்தை அவர்கள் உடைத்த போது, அதாவது கர்த்தர் கொடுத்த விதிமுறைகளை அவர்கள் மீறிய போது, அழகிய வாழ்வு அலங்கோலமானது. விதிமுறைகளை மீறுதல் ஆதிபெற்றோரிடமிருந்து, இன்றளவும் தொடர்ச்சியாக வந்துக்கொண்டே இருக்கின்றது. அதனால், பிதாவாகிய கர்த்தர், அவரது குமாரன் கிறிஸ்துவினாலே. நம் அனைவருக்கும் அழகான வாழ்க்கையை கொடுத்திருந்தும், அந்த வாழ்வு ஏன் அழகாக இல்லை?.

ஏனெனில், அர்த்தமுள்ள வாழ்க்கை என்பதே அழகான வாழ்க்கையாக இருக்கின்றது. தலைவன் (இறைவன்) வகுத்த விதிமுறைகளை கடைபிடிப்பதே வாழ்வினை அர்த்தமுள்ள தாக்குகின்றது. ஆகையால், வாழ்வின் அர்த்தம் தான் என்ன?, வாழ்வினை அழகாக்க என்ன செய்ய வேண்டும்? என்பதனை நாம் அறிய வேண்டியது அவசியமாகும்.

### 1. தரமான கொள்கைகள் வேண்டும்

வாழ்வை அழகானதாக, அர்த்தமுள்ளதாக மாற்ற, நமக்கு தரமான கொள்கைகள் வேண்டும். கிறிஸ்துவின் போதனைகளைவிட தரமான கொள்கைகள் நிச்சயம் இல்லை என்றே சொல்லாலம். அவைகள் அனைத்தும் அவ்வளவு உயர்ந்த ஒழுக்கநெறி மிக்கவையாகும். ஆம்! கிறிஸ்தவத்தினை பின்பற்றாதவர்கள் கூட கிறிஸ்துவின் போதனையை மிக உயர்ந்தது என சொல்கின்றனர்.

கிறிஸ்துவின் போதனைகள், மரத்தில் ஏதோ ஒரு கிளையில் உள்ள, இலையினை கிள்ளி எறிவது அல்ல, மாறாக அது வேரிலிருந்து, நுனிவரை முழுமையாக அம்மரத்தையே தூய்மையாக்கி, பலன் தரும்படி மாற்றுவதாக செவ்வைப் படுத்துவதாக இருக்கின்றது. அவற்றில் சிலவற்றை பார்ப்போம்.

அதில் ஒன்று, எல்லா உயிர்களிடத்தும் அன்புக் கூறு. இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்கள் மீது வைத்திருக்கும் தியாகமான, நிபந்தனையற்ற அன்பைப்போலவே, நாமும் நம்மைச் சுற்றியிருப்பவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும் என்பதை இந்த வசனம் ஒரு முக்கியமான கட்டளையாக வலியுறுத்துகிறது. சுயநலமில்லாத இந்த அன்பு, கிறிஸ்தவ விசுவாசத்தின் மிக முக்கியமான அடையாளமாகும். இயேசுவின் அன்பு அளவற்றது. வெறும் வார்த்தைகளால் மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கு உதவி

செய்வதிலும், மன்னிப்பதிலும் இந்த அன்பைக் காண்பிக்க வேண்டும். மத்தேயு 22:37-39 "இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே." (உபாகமம் 6:5; லேவியராகமம் 19:18; ரோமர் 13:9; கலாத்தியர் 6:10; யோவான் 15:12, நீதிமொழி 12:10; ஆதியாகமம் 2:15).

அடுத்ததாக, எப்பொழும் தூய்மையாக (பரிசுத்தமாக) வாழுங்கள். நம்மை படைத்த கர்த்தர் தூய்மையானவர் மற்றும் பாவமில்லாதவர். கடவுளுடைய பிள்ளைகள் அவருடைய சாயலை வெளிப்படுத்தும் வகையில் தூய்மையாகவும், உலகத்தின் தவறான வழிகளில் இருந்து ஒதுங்கியும் இருக்க வேண்டும். 1 பேதுரு 1:14,15 "நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்." விசுவாசிகள் தேவனுக்கென்று சொந்தமானவர்கள். எனவே, அவர்கள் மற்ற உலகத்து மக்களைப் போல வாழாமல், கடவுளுக்கு உகந்தவர்களாக வாழ வேண்டும். (1 பேதுரு 2:9,12; 3:1, எபிரெயர் 12:14; 1 தெச. 4:3-7, பிலிப்பியர் 2:15,16; எபி. 13:5; 1 யோவான் 3:3; லேவியராகமம் 20:7,26; தீத்து 2:14; உபாகமம் 7:6; 14:2).

அடுத்து எல்லா சூழலிலும் நம்பிக்கை (விசுவாசத்துடன்) உள்ளவர்களாக இருங்கள். நம்முடைய பலவீனமான நேரங்களில், உதவும் உற்ற துணையாக சர்வ வல்லமையுள்ள கடவுள் இருக்கிறார். மனிதர்களை நம்பி ஏமாறாமல், சதா காலமும் மாறாத கர்த்தர் மீது முழுமையான நம்பிக்கையை வைக்க வேண்டும். எரேமியா 17:7,8 "கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்." மனிதர்கள் மீதோ அல்லது உலகப் பொருட்கள் மீதோ நம்பிக்கை வைக்காமல், முழுமையாகக் கர்த்தர் மீது நம்பிக்கை வைத்து, அவரையே தங்கள் புகலிடமாகக் கொள்பவர்கள் மிகுந்த ஆசீர்வாதமானவர்கள். கர்த்தரை முழுமையாக நம்பி வாழும் எந்தவொரு நபரும், மலையைப் போல எந்தவொரு சூழ்நிலையிலும் அசைக்கப்படாமல், மிக உறுதியாக நிலைத்திருப்பார்கள். எத்தனை சோதனைகள் அல்லது எதிர்ப்புகள் வந்தாலும், கடவுள் மீது நம்பிக்கை வைப்பவர்கள் அவரது பாதுகாப்பில் என்றென்றும் உறுதியாக இருப்பார்கள் (சங்கீதம் 146:5; சங்கீதம் 34:8; ஏசாயா 26:3; சங்கீதம் 40:4; 1 நாளாகமம் 5:20; சங்கீதம் 125:1; மாற்கு 9:23; மத்தேயு 21:22; யோவான் 14:1).

## 2. நேர்த்தியான விருப்பங்கள் வேண்டும்

தரமான கொள்கைளை நிறைவேற்ற, நேர்த்தியான விருப்பங்கள் வேண்டும். விருப்பங்கள் நம் ஒவ்வொருவருக்கும் மாறுபடும். ஆனால், நம் வாழ்வை அழகானதாக, அர்த்தமுள்ளதாக மாற்ற, நம் அனைவரின் விருப்பங்களும் ஒரே நேர்கோட்டில் கர்த்தருக்கு ஏற்றபடி இருக்க வேண்டும்.

நமது விருப்பங்கள் தவறும்பட்சத்தில், அதாவது தவறானதாக மாறும் பட்சத்தில், அது நமது தரமான கொள்கை நிறைந்த வாழ்வை தரமற்றதாக மாற்றிவிடும் அபாயம் உள்ளது. ஆகையால், நாம் நமக்குள்ளே இருக்கின்ற விருப்பங்களை நேர்த்தியாக்குவது மிகவும் அவசியமானது.

சிலருக்கு சுவை நிறைந்த உணவுகள் மீது அலாதி விருப்பம் (நீதிமொழி 23:1,2,21), சிலருக்கு தங்களை அலங்கரித்து, அழகாக காண்பிப்பதில் ஒரு பேராவல் (நீதிமொழி 31:30; 2 ராஜா 9:30; 1 பேதுரு 3:3-4; 1 தீமோத்தேயு 2:9-10; நீதிமொழிகள் 16:32), சிலருக்கு செல்வங்கள் மீது (2தீமோ 6:10; மத்தேயு 16:25,26; பிரசங்கி 5:10) என்று விருப்பங்கள் மாறுப்பட்டுகொண்டிருக்கலாம். நம் விருப்பம் எதன் மீது?

எபே 5:10 ''கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்.'' எது நேர்த்தியான விருப்பம்? ஒரு வரியில் சொல்வதென்றால், கர்த்தருக்கு எது பிரியமோ, சித்தமோ அதனை விரும்புவது நேர்த்தியான விருப்பமாகும் (கொலோ. 3:20; மீகா 6:8; ரோமர் 12:1; எபிரெயர் 12:28; 1பேதுரு 2:20; 1தீமோத்தேயு 5:4; 1பேதுரு 2:5; 1 தீமோத்தேயு 2:2,3; நீதிமொழிகள் 21:3).

சங்கீதக்காரனுக்கு இறை சமுகத்தில் நேரங்களை செலவழிப்பதிலும், இறைவார்த்தைகளை கற்பதிலும் பேராவல் (சங்கீதம் 84:1,2,10; 119:131,148), மோசேக்கு இவ்வுலக செல்வங்கள், இன்பங்கள், மதிப்புகளைவிட கிறிஸ்துவின் நிமித்தம் வரும் துன்பம், நிந்தையை மீது விருப்பம் (எபிரெயர் 11:24-27), பேதுருவிற்கு என்ன நடந்தாலும் இயேசுவை பின்பற்றுவதில் பேரார்வம் (லூக்கா 23:33), பவுலிற்கு கிறிஸ்துவை அறிகின்ற அறிவின் மீது விருப்பம். அந்த அறிவிற்காக இந்த உலகம் சார்ந்த மதிப்புமிக்க ஒவ்வொன்றையும் குப்பையாக எண்ணி தூக்கியெறிந்தார் (பிலிப்பியர் 3:1-11),

அப்போஸ்தலர்களுக்கும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கும், என்ன நடந்தாலும், இயேசுவை அறிவிக்க வேண்டும் என்ற பேராவல் (அப்போஸ்தலர் 5:41,42; 8:1-4; 14:19-25). நமக்குள் இருக்கின்ற விருப்பங்கள், நேர்த்தியானதாக இருக்கின்றதா? சற்று நிதானித்து, சீர்படுத்துவோம்.

## 3. சரியான புரிதல்கள் வேண்டும்

நேர்த்தியான விருப்பங்களை செயல்படுத்த சரியான புரிதல்கள் வேண்டும். ஆகையால்தான் “எனக்கு உணர்வை தாரும்” என்று அடிக்கடி சங்கீதக்காரன் ஜெப பாடல் செய்தான். “எனக்கு உணர்வைத் தாரும்; அப்பொழுது நான் உமது வேதத்தைப் பற்றிக்கொண்டு, என் முழு இருதயத்தோடும் அதைக் கைக்கொள்ளுவேன்.” நம்மை படைத்த கர்த்தர் நல்லவர், அவர் நன்மையை மட்டுமே செய்வார் என்றல்ல, மாறாக, கர்த்தர் நல்லவர், அவர் செய்வது எல்லாம் நன்மையே என்றும், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே நாம் நித்திய வாழ்வு பெற ஒரே வழி என்றும், நம்மை படைத்தவரை பற்றியும், நம்மை பாவத்திலிருந்து மீட்ட ஆண்டவர் இயேசுவை பற்றியும் சரியான புரிதல் வேண்டும் (யோவான் 17:3; 2பேதுரு 3:18; 1யோவான் 5:20; யோவான் 3:17; யோவான் 14:6).

பரிசுத்த ஆவியானவர் நமக்கு தந்தருளின, பைபிள் முரண்பாடு அற்றது, அதாவது


### வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
Ph.No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

முன்னுக்கு பின் முரணாக பேசாது என்றும், அது மாத்திரமே நமது ஆவிக்குரிய வாழ்விற்கு போதுமானது என்றும், பைபிளை பற்றியும் சரிதான புரிதல் வேண்டும் (2தீமோ 3:16,17; சங்கீதம் 19:7-9; யோவான் 17:17; எபிரெயர் 4:12). நாம் மண் என்றும், நம் வாழ்நாள் புகையை போன்றது என்றும், நம்முடைய வழிகள் நம்மால் ஆகாது என்றும், நாம் அப்பிரயோஜனமானவர்கள் என்றும், நாம் பாவிகள் மற்றும் தண்டனைக்குரியவர்கள் என்றும், நம்மை பற்றியும் சரிதான புரிதல் வேண்டும் (ஆதியாகமம் 2:7; சங்கீதம் 103:14; எரேமியா 10:23; லூக்கா 17:10; எபே. 2:1-5).

அதேபோல, கிறிஸ்து உண்டாக்கிய சபையை பற்றியும், அவருடைய போதனைகளை பற்றியும், நாம் இவ்வுலகத்தில் எப்படி வந்தோம்? ஏன் இருக்கின்றோம்? எங்கே போக போகின்றோம்? என்பதனை பற்றியெல்லாம் சரியான புரிதல் வேண்டும். ஏனெனில் ஒரு காரியத்தினை சரியாக புரிந்துக்கொள்வதினால் உண்டாகும் நன்மையைவிட, அந்த ஒரு காரியத்தினை தவறாக புரிந்துக்கொள்வதினால் ஏற்படும் விளைவுகள் (தீமைகள்) அதிகமானதாக இருக்கும் (மத்தேயு 22:29). ஆகையால், சரியாக புரிந்துக்கொள்வது அவசியமாகும்.

இறுதியாக! பிரியமானவர்களே, நம்மில் அநேகர் நான் ஏன் வாழ்கின்றேன்? என எனக்கே தெரியவில்லை என புலம்புகிறவர்களாகவும், ஏதோ வாழ்கின்றேன் என வாழ்வை சலித்துக்கொள்கின்றவர்களாகவும் இருக்கின்றோம். நாம் அனைவரும் வாழ்வியலின் அர்த்தம் உணராமலும், வாழாமலும் இருக்கின்றோம். நான் வாழ வேண்டிய வழிமுறையில் வாழும்போது, நம் வாழ்வு அர்த்தமுள்ளதாகவும், அழகானதாகவும் மாறிவிடுதாக இருக்கின்றது. அவ்வாறு நாம் வாழ எல்லாம் வல்ல பிதா அருள் புரிவாராக!

– அன்புடன், ஆசிரியர்

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil:** **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam & Benny Martin in Tamil:** **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program:** **Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**

Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**

Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

# ஆசீர்வதிக்கப்பட்ட பெண்

அன்புள்ளம் கொண்டவர்களே! இயேசு ராஜாவின் பெயரிலே உங்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்த்துக்கள்! ஜெபங்கள்!

பிரியமானவர்களே! கோடை விடுமுறை முடிந்து பள்ளி, கல்லூரிகள், அலுவலகம், வேலைகள் என்ற இயல்பு நிலைக்கு திரும்பி விட்டீர்களா? விடுமுறை நாட்களில் கர்த்தரோடே அதிக நேரம் செலவிட முடிந்ததா? அவருக்காக ஏதாவது ஒரு காரியத்தைச் செய்தோமா? அவ்வாறு செய்தீர்கள் என்று விசுவாசிக்கிறேன்.

அன்புக்குரியவர்களே! இந்த மாதம் நாம் படிக்க இருக்கும் பெண்ணானவள், இரட்சகராகிய இயேசு கிறஸ்துவை பூமிக்கு அனுப்பும்போது, அவரைப் பெற்றெடுக்க தாழ்மை, விசுவாசம், கீழ்படிதல் உடைய ஒரு பெண்ணை கடவுள் தேர்ந்தெடுத்தார். அவர்தான் **"மரியாள்"**

"பெண்களுக்குள்ளே பாக்கியம் பெற்றவள்" லூக்கா 1:28

கர்த்தருக்காக தன் வாழ்வை அர்ப்பணித்தல் என்பதில் மிக முக்கியமான உதாரணம் இந்த மரியாள்.

### கடவுளுக்கு கீழ்ப்படிந்த பெண்:

கர்த்தருடைய தூதன் மரியாளிடம் வந்து, கடவுளுடைய திட்டத்தை சொன்னபோது, மனிதரால் புரிந்துகொள்ள முடியாததாக இருந்தபோதும், மரியாள் விசுவாசத்துடன் பதில் கொடுத்தார். (லூக். 1:28).

மரியாள் கடவுளுடைய சித்தத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுத்தாள்.

கீழ்ப்படிதல் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் (1 சாமு. 15:22).

### தாழ்மையான இருதயம்:

கடவுள் மரியாளை மாபெரும் தன்னுடைய திட்டத்திற்காக தெரிந்துகொண்டதை அவள் பெருமையாக எண்ணவில்லை, வெளிப்படுத்த வில்லை.

எல்லா மகிமையையும், கனத்தையும் கடவுளுக்கே கொடுத்தார். (லூக். 1:46).

கர்த்தர் தாழ்மையுள்ளவர்களை உயர்த்துகிறார் (யாக். 4:6).

ஒரு பெண்ணுக்கு உண்மையான அழகு என்பது தோற்றமல்ல வெளிப்புற அழகல்ல, தேவபயம், நல்ல குணங்கள் (நீதி. 31:30; 1 பேதுரு 3:3,5).

### கஷ்டங்களில் விசுவாசமாக இருந்தாள்:

இந்த மரியாளின் வாழ்வில் சில கடினமான சூழ்நிலைகளை சந்தித்தாள். திருமணத்திற்கு முன்பாகவே குழந்தையை சுமந்தது (கன்னியாக இருந்தபோது பரிசுத்த ஆவியின் நிழலில்) இதை புரியாத மனிதர்கள் அவளுக்கு நியமிக்கப்பட்ட மனிதன் அவளை தள்ளிவிட எண்ணினது. இயேசு பிறக்க போகும்போது பிரயாணம், பிறந்தபின்பு தங்க

(தொடர்ச்சி... ௨௰ பக்கம்)

## அறிந்து கொள்வோம்

## மாதம் ஒரு "பூ" கருவிளை



சங்கப் பாடல்களில் குறிப்பிடப்படும் கருவிளை மலரை இக்காலத்தில் சங்குப்பூ என்கின்றனர். தோற்றத்தில் சங்கின் விரிவாய் போலத் தோற்றம் தருவதால் இதனை இவ்வாறு கூறுகின்றனர். ஏழு வண்ணங்களில் ஒன்றான நீலநிறத்தைப் பஞ்சவண்ணங்களில் ஒன்றாகக் காணும்போது கருமை எனக் கொள்வர். இந்த வகையில் இது கரிய விளைப்பூ. குன்றத்து மகளிர் குவித்து விளையாடிய பூக்களில் இதுவும் ஒன்று.

இலங்கையில் இதனை நீல காக்கணை பூ என்ற பெயரால் அழைப்பர்.

சங்குப்பூ பல்வேறு வண்ணங்களில் பூக்கும். கருவிளை நீலநிறத்தில் மட்டும் பூக்கும் அதன் வேறு இனம்.

கருவிளை என்னும் இந்தப் பூ மணிப் பூங்கருவிளை என்று இந்தப் பூ விளக்கப்படுவதால், இந்தப் பூ மணிநிறம் கொண்டது எனத் தெரியவருகிறது.

இடமில்லாதிருந்து (லூக். 2:7). ஏரோது ராஜாவின் கோபத்தினால் எகிப்துக்கு ஓட வேண்டியது இருந்தது (மத். 2:13). மிகவும் வேதனையான தருணம் இயேசுவை சிலுவையின் அருகே மரியாள் நின்று கொண்டு இருந்து (யோவான் 19:25).

நம்முடைய விசுவாச வாழ்வில் சோதனை வரும். ஆனால், கடவுள் நம்மைவிட்டு விலகமாட்டார் (எபி. 13:5).

**ஜெபிக்கும் பெண்ணாக இருந்த மரியாள்:**

இயேசு பரலோகத்திற்கு ஏறிச்சென்ற பின் மரியாள் சீஷர்களுடன் ஜெபத்தில் இருந்தாள் (அப். 1:14).

ஜெபம் செய்யும் குணமுடைய பெண் குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் ஆசீர்வாதமானவள் (1தெச. 5:17).

பிரியமானவர்களே! இன்றைய உலகம் வெளிப்புறத் தோற்றம், முக்கியத்தைப் பற்றி அதிகம் சொல்லிக் கொடுக்கிறது. ஆனால், கடவுள் நம் உள்ளத்தைப் பார்க்கிறார் (1 சாமு. 16:7).

**தேவபக்தியுள்ள பெண்கள்:**

- ★ குடும்பத்தை கட்டி எழுப்புவாள்
- ★ ஜெபத்தில் உறுதியாக இருப்பாள்
- ★ அன்போடு நடப்பாள்
- ★ தேவனை மகிமைப்படுத்துவாள்.

கடவுளுக்கு கீழ்ப்படிந்து, தாழ்மையோடு எல்லா கஷ்டங்களிலும் விசுவாசத்தில் நிலைத்திருப்பாள் (எரே. 17:7). நாம் இதுபோல வாழ எல்லா முயற்சிகளையும் கர்த்தருக்குள் எடுப்போம்.

கர்த்தரின் கிருபையோடு, அடுத்த இதழில் சந்திப்போம்!

சகோதரி. **பெவர்லி கிங்ஸ்லி**

## பொதுவான செய்திகள் — முச்சங்கங்கள்

முச்சங்கங்கள் என்பது பண்டைய தமிழகத்தில் தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் வளர்ப்பதற்காக பாண்டிய மன்னர்களின் ஆதரவோடு கூட்டப்பட்ட மூன்று பெரும் புலவர் அவைகளைக் குறிக்கும். தமிழ் இலக்கிய வரலாற்றில் இந்த முச்சங்கங்களின் காலம் ஒரு பொற்காலமாகக் கருதப்படுகிறது. அவை பற்றிய முக்கிய விவரங்கள் கீழே:

**1. முதற்சங்கம் (தலைச்சங்கம்):** இடம்: கடல் கொண்ட தென்மதுரை (இன்றைய மதுரைக்கு தெற்கே கடலில் மூழ்கிய பகுதி. ஆதரித்த அரசர்கள்: காய்ச்சின வழுதி முதல் கடுங்கோன் வரை 89 பாண்டிய மன்னர்கள்.

புலவர்கள்: அகத்தியர், நிதியின் கிழவன் உள்ளிட்ட 4,449 புலவர்கள்.

இலக்கண நூல்: அகத்தியம்.

**2. இடைச்சங்கம்:** இடம்: கபாடபுரம் (இதுவும் கடலடைப்பினால் மூழ்கிப்போனது).

ஆதரித்த அரசர்கள்: வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் வரை 59 பாண்டிய மன்னர்கள்.

புலவர்கள்: அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர்க் கருங்கோழி, மோசி, கீரந்தை உள்ளிட்ட 3,700 புலவர்கள்.

இலக்கண நூல்: தொல்காப்பியம், அகத்தியம், மாபுராணம், இசைநுணுக்கம்.

கிடைத்த ஒரே நூல்: தொல்காப்பியம் (மிகப்பண்டைய தமிழ் இலக்கண நூல்).

**3. கடைச்சங்கம்:** இடம்: இன்றைய மதுரை (வடமதுரை).

ஆதரித்த அரசர்கள்: முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை 49 பாண்டிய மன்னர்கள்.

புலவர்கள்: நக்கீரர், கபிலர், பரணர், ஔவையார், சிறுமேதாவியார் உள்ளிட்ட 449 புலவர்கள்.

இலக்கிய நூல்கள்: இன்று நாம் படிக்கும் எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு (பதினெண்மேற்கணக்கு நூல்கள்) ஆகியவை இச்சங்க காலத்திலேயே தொகுக்கப்பட்டன.

# கடுகு விதையை பற்றிய உவமை

**மாற்கு 4:30-32**

அன்பான வாலிபர்களே! உங்கள் அனைவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன், கோடைகால விடுமுறை எல்லாம் முடிந்து, மீண்டும் பள்ளி, கல்லூரிகள் திறக்கப்பட போகின்றன. புதிய எண்ணங்கள், பெரிய எதிர்ப்பார்ப்புகள், தீர்மானங்களுடன் செல்லும் உங்கள் அனைவருக்காகவும் கடவுளிடம் நாங்கள் பிரார்த்தனை செய்து கொள்கின்றோம். சரி இந்த மாதம் மற்றுமொரு உவமையை பரிசுத்த வேதாகத்திலிருந்து கற்றுக் கொள்வோம்.

இந்த மாதம் நாம் ஆண்டவர் இயேசுவின் உவமைகளில் ஒன்றான கடுகு விதையை பற்றிய உவமை பற்றி படிப்போம். பூமிக்குரிய உதாரணமாக கடுகு விதை பயன்படுத்தப்பட்டிருந்தாலும் அதன் ஆவிக்குரிய விளக்கம் (அல்லது) பொருள் சபையாகிய கர்த்தருடைய இராஜ்யத்தைப் புரியவைக்கவே ஆகும். சிறிய விதை விதைக்கப் படுகிறது. அது வளர்ந்து பெரியதாகும்போது மற்ற எல்லா செடி, கொடி, மரங்களைவிட உயரமான தாகவும், பெரியதாகவும் வளருகின்றது. இயேசு இதை சொல்வதன் காரணம். கர்த்தருடைய ராஜ்ஜியமாகிய சபையானது சிறியதாகவும், எளிமையானதாகவும் தோன்றலாம். ஆனால் அது பெரியது, கனத்திற்குரியது, மகிமை நிறைந்தது. மற்றவர்களின் பார்வைக்கு கடுகு விதையைபோல சிறியதாக, அற்பமாக தோன்றலாம். இயேசுவின் போதனைகளும், கடவுளுடைய ராஜ்ஜியத்தின் ஆரம்பமும், அந்தச் சிறிய விதை ஒரு பெரிய மரமாக மாறுவதுபோல, அதுவும் உலகத்தின் எத்திக்கிலும் இயேசுவின் சீடர்கள் மூலமாகவும், இயேசுவின் போதனைகளை கேட்டும், மாபெரும் அங்கமாக வளர்ந்து பெருகும் என்பதையே கடுகுவிதை உவமை மூலம் இயேசு போதித்தார்.

இயேசு தம்முடைய போதனைகள் குறிப்பாக பெரும்பாலான உவமைகளின் ராஜ்ஜியமாகிய

(தொடர்ச்சி... 10ம் பக்கம்)

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | A. சாம் குமார் | - பெருமாள் வலசு |
| 2. | V. ஏஞ்சல் ஜோயன்னா | - மதுரை |
| 3. | J. நவீன் பீட்டர் | - மதுரை |
| 4. | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | - மதுரை |
| 5. | S. ஜூடா லியோ | - ரஸ்தா |
| 6. | G. ஜெர்லின் | - ரஸ்தா |
| 7. | A. ஹானா ஜோதிராணி | - மதுரை |
| 8. | D. டே∴ப்னி | - சென்னை |
| 9. | D. ஜூனித்தா | - சென்னை |
| 10. | S. ஜூடித் ஆராதனா | - ராணிபேட்டை |
| 11. | A. ஆடின் ∴பேபியோ | - ராணிபேட்டை |
| 12. | A. ஆலன் காலேப் | - ராணிபேட்டை |
| 13. | S. ஜோசுவா | - ராணிபேட்டை |
| 14. | A. சுபிக்ஷா | - பெருமாள் வலசு |
| 15. | M. ஜோனத்தான் | - கரூர் |

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. நாம் சாமர்த்தியமாய் சேர்த்து வைக்க வேண்டிய ஆவிக்குரிய காரியங்கள் யாவை? (யோசேப்பைப் போல)
2. யோர்தான் நதி இரண்டாக பிரிக்க எலிசா செய்த செயல் என்ன?
3. எதற்காக இந்த அற்புதம் நிகழ்த்தப்பட்டது? (யோர்தான் நதி இரண்டாக பிரிந்தது)
4. உண்மையான குழந்தையின் தாயை கண்டுபிடிக்க சாலமோன் என்ன செய்ய சொன்னார்? அதற்கு அந்த தாய் சொன்ன பதில் என்ன?
5. அமத்சியா ராஜாவிடமிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட நல்ல பண்பு என்ன?



சபையையும், அதன் முக்கியத்துவத்தையும் போதித்தார். சபையையும், அதன் வளர்ச்சியையும் ஆண்டவர் கடுகு விதைக்கும், அதன் வளர்ச்சிக்கும் ஒப்பிடுகிறார். சபை ஒரு ஆவிக்குரிய இடம். அது மிகவும் முக்கியமானது. எனவே, சபையையும், திருச்சபையாக கூடி வருவதையும், சபை கூட்டங்களையும் அற்பமாக எண்ணுவது கூடாது. ஒரு சிறிய துவக்கம் ஆண்டவரோடு என்றும் நன்மை நிறைந்ததாக, மகிமையுள்ளதாகவே இருக்கும். இயேசுவின் போதனைகளை கேட்போம், கவனத்துடன் கேட்போம்.

ஏனென்றால் ஆண்டவர் இயேசு மீண்டும் இந்த உலகத்தை நியாயந்தீர்க்க வரும்போது, முதலில் சபையிடமே வருகிறார். சபையை உலகம் சிறியதாக அற்பமாக எண்ணலாம். ஆனால் அது மிகவும் பெரியது, வல்லமையுள்ளது, உயிருள்ளது, இரண்டாம் வருகையில் எடுத்துக் கொள்ளப்பட இருப்பது. எனவே, சபையின் சட்டதிட்டங்களையும், பைபிளில் சொல்லப்பட்ட சரியான சபையைப் பற்றியும் தெரிந்து கொள்வோம். அற்ப எண்ணம் வேண்டாம். இன்றே சபை என்னும் மாபெரும் காக்கப்பட்ட இடத்திற்குள் செல்ல தீர்மானம் எடுப்போம். ஆமென்.

– உங்கள் அண்ணன் **ஜோசப் பிரதீப்**

## தமிழ் பைபிளில் உள்ள சில கடின சொற்களுக்கான விளக்கம்

- ★ அகத்தியம் (எஸ்தர் 4:8) – கட்டாயம், அவசியம்
- ★ அகரதமான (ஏசா 14:15) – ஆழமான
- ★ அசங்கியம் (எஸ்றா 9:11) – அருவருப்பு, தூய்மையின்மை
- ★ அசம்பி (1 சாமு 21:5) – பயணிகள் தோட்பை
- ★ அஸ்திராயுதம் (எரே 50:25, 51:20) – கொடுமையான ஆயுதம்
- ★ அஞ்சிக்கை (ஓசியா 3:5) – அச்சம், பயம்
- ★ அசூசம் (புலம்பல்) – தீட்டு
- ★ அசுப்பு (யோபு 9:23, எரே 4:20) – சடுதியாக, திடீரென
- ★ அபரஞ்சி பூஷணம் (நீதி 25:12) – புடமிடப்பட்ட பொன்
- ★ அழுங்கு (லேவி 11:30) – எறும்பு தின்னும் விலங்கு
- ★ அழிம்பு (எரே 6:7) – கொள்ளை, சூறையாடுதல்
- ★ ஆரோகணம் (சங் 120-134) – மேலேறும் இசை சுருதி
- ★ இதமியம் (நியா 18:20) – மகிழ்ச்சியோடு உடன்படுதல்
- ★ ஈசல் போடுதல் – விசிலடித்தல், நையாண்டி
- ★ இளக்கரிப்பு (ஏசா 42:4) – சோர்ந்து போதல்
- ★ உக்கல் (ஆப 3:16) – உறுத்துப்போதல்
- ★ உசாவு துணை (யோபு 26:3) – உற்ற துணைவன்
- ★ உம்பிளிக்கை (எஸ்றா 9:12) – நித்திய சுதந்திரம்
- ★ உறுமால் (அப் 19:12) – கைக்குட்டை
- ★ ஒற்தலாம் (மத் 23:23, லூக் 11:42) – புதினா
- ★ கடாட்சம் (உன் 8:10) – அருட்பார்வை
- ★ ஏகோபித்து (நியா 20:1) – ஒருமித்து
- ★ கட்டியக்காரன் (தானி 3:4) – அரசு கட்டளை அறிவிப்பவன்
- ★ கலாதி (எஸ்றா 4:15) – கலகம், புரட்சி
- ★ கலிக்கம் (வெளி 3:18) – கண்ணிலிடும் மருந்து
- ★ கிரியிருப்பவர்கள் (2 இராஜா 14:14) – பிணைக் கைதிகள்
- ★ கறளை (எரே 48:6) – பிரயோஜனமில்லாத
- ★ காங்கை (ஏசா 25:5) – வெப்பம்
- ★ காய்மகாரம் (1 சாமு 18:9) – பொறாமை
- ★ கிரியாப்பிரமாணம் (ரோம 3:27) – செயல்களால் முக்தி தேடுதல்

# யோசேப்பு உயர்த்தப்படுதல்

என் அன்பு மழலைச் செல்வங்களே! நன்றாக இருக்கிறீர்களா? யோசேப்பு அண்ணா உயர்த்தப் பட்டதை பற்றி படிக்கலாம். ஆதி. 41:39-46.

எகிப்து என்னும் நாட்டிலே, பார்வோன் என்னும் ராஜா வாழ்ந்து வந்தார். பார்வோன் ராஜா யோசேப்பு அண்ணாவை எகிப்து நாடு முழுவதற்கும் அதிகாரியாக உயர்த்தி வைத்தார். ஏன்? பார்வோன் ராஜா யோசேப்பு அண்ணாவை உயர்த்த வேண்டும். ஒரு நாள் பார்வோன் ராஜா தூங்கிக் கொண்டிருக்கும்போது ஒரு கனவினைக் கண்டார்.

அந்தக் கனவுக்கு விடை தெரியாமல் இருந்தபோது, ராஜா, யோசேப்பு அண்ணாவை அழைத்து தான் கண்ட கனவிற்கு விளக்கம் சொல்லும்படி கேட்டுக் கொண்டார். அப்படியே யோசேப்பு அண்ணாவும் அதற்கு விளக்கம் கொடுத்தார். அது என்னவென்றால் எகிப்து நாடு, முதல் ஏழு வருடம் மிக செழிப்பாக இருக்கும். பின்பு வரக்கூடிய ஏழு வருடம் மிகவும் கொடிய வறட்சியினால் பாதிக்கப்படும் என்று விளக்கம் கொடுத்தார்.

யோசேப்பு அண்ணா, ராஜாவுக்கு ஒரு யோசனை சொல்லுகிறார். முதல் ஏழு வருடம் விளையக்கூடிய எல்லா விளைச்சல்களிலும் ஐந்தில் ஒரு பங்கை எடுத்து, சேமித்து வைத்தால் பின்பு வரக்கூடிய வறட்சியான அந்த ஏழு வருடங்களையும் குறைவு இல்லாமல் வாழ முடியும் என்று சொன்னார். யோசேப்பின் சாமர்த்தியமான பதிலை கேட்ட ராஜா எகிப்து நாடு முழுவதற்கும்



அதிகாரியாக யோசேப்பு அண்ணாவை உயர்த்தி வைத்தார். யோசேப்பு தன் காரிய சாமர்த்தியத்தினால் தனக்கு பின்நாட்களில் வரும் ஆபத்தை உணர்ந்து, முன்கூட்டியே சேமித்து வைத்தான்.

எனது அருமை பிள்ளைகளே!

இதிலிருந்து நாம் என்ன பாடம் கற்றுக் கொள்ள முடியும்? யோசேப்பு அண்ணா தனக்கு வரும் ஆபத்தை தடுப்பதற்கு சாமர்த்தியமாய் முன்கூட்டியே தயார் செய்தார். அதுபோல நம் வாழ்க்கையிலும் பின்னாளில் நமக்கும் பேராபத்து உண்டு. அந்த ஆபத்து என்னவென்றால், சர்வ வல்லமையுள்ள ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவானவர் மீண்டும் மேகத்திலே வருவார். அவர் வரும்பொழுது பூமியும், பூமியில் உள்ள எல்லா உயிரினங்களும் வெந்து அழிந்து போகும்.

இப்படிப்பட்ட ஆபத்தை நாம் முன்கூட்டியே தடுக்க சில ஆவிக்குரிய காரியங்களை சாமர்த்தியமாய் சேர்த்து வைக்க வேண்டும். அதாவது கர்த்தருக்கு பயப்படுதல், பெற்றோருக்கு கீழ்ப்படிதல், சபையில் உள்ள பெரியோர்களை கனப்படுத்துதல், ஏழை எளியவர்களுக்கு உதவி செய்தல், பிறரிடம் அன்பு காட்டுதல் இதுபோன்ற நல்ல குணாதிசயங்களை சாமர்த்தியமாய் சேர்த்து வைக்கும் பொழுது, பேராபத்தில் இருந்து நாம் தப்பித்துக் கொள்ளலாம். அப்பொழுது, எகிப்து ராஜா, யோசேப்பு அண்ணாவை உயர்த்தினதுபோல, பரலோக பரிசுத்த பிதாவும் உங்களை உயர்த்துவார். ஆமென்.

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 16:20**

"விவேகத்துடன் காரியத்தை நடப்பிக்கிறவன் நன்மைபெறுவான்; கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான்."

**– சகோ. பீட்டர்**

# எலிசா யோர்தான் நதியை இரண்டாக பிரித்தல்

(2 இராஜாக்கள் 2:13-14)

கர்த்தருக்கு மிகவும் பிடித்த அருமையான செல்லப் பிள்ளைகளா! இந்த புதிய கல்வியாண்டு நீங்கள் எல்லாரும் பள்ளிக்குச் சென்று, நல்ல படிப்பறிவையும், கர்த்தருக்கு பிரியமான காரியங்களை கற்றுக்கொள்கிற ஆண்டாகவும் இருக்க வாழ்த்துகிறேன். இந்த மாதத்திலும் கூட ஒரு வேதாகம சம்பவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்வது மகிழ்ச்சி. அதென்னவெனில், தீர்க்கதரிசியான எலியா பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு, அவருடைய சீஷரான



எலிசா யோர்தான் நதியை இரண்டாகப் பிரித்த நிகழ்வை குறித்துப் படிப்போம்.

பிள்ளைகளா! எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்போது, அவரிடமிருந்து கீழே விழுந்த சால்வையை (ஆடையை) எலிசா எடுத்துக் கொள்கிறார். அந்த சால்வையுடன் யோர்தான் நதியின் கரைக்குத் திரும்பி வந்த எலிசா, நதியைக் கடந்து அக்கரைக்குச் செல்ல வேண்டியிருந்தாயிருந்தது. பாருங்கள்! எலியாவுக்கு இருந்த அதே ஆவியின் வல்லமை தனக்கும் கிடைத்துள்ளதா என்பதை அறிய எலிசா, எலியாவின் சால்வையைச் சுருட்டி தண்ணீரை அடித்தார். அதுமட்டுமல்லாமல், 'எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே?' என்று கூப்பிடவும் செய்தார்.

அவ்வாறே அவர் தண்ணீரை அடித்தவுடனே, நடந்த அதிசயம் என்னவென்றால், யோர்தான் நதியின் தண்ணீர் இப்பக்கமும் அப்பக்கமுமாகப் பிரிந்தது. இது எவ்வளவு பெரிய அதிசயமான காரியம். இதற்கு முன் நாம் எங்கே படித்தது நினைவிற்கு வரும் என்று எண்ணுகிறேன். அது இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து வரும்போது, கர்த்தர் மோசேயின் கரத்தினால் செங்கடலை இரண்டாகப் பிரித்தது உங்கள் நினைவில் இருக்கிறதா? அதேபோல தான் இந்த இடத்திலும் ஒரு காரியம் நாம் பார்க்கிறோம். அப்பொழுது எலிசா உலர்ந்த தரையில் நடந்து, யோர்தான் நதியினைக் கடந்து சென்றார்.

எதற்காக இந்த அற்புதம் நிகழ்ந்தப்பட்டது? என்ற கேள்வி உங்களுக்கு வருகிறதா? அவை எலியாவுக்குப் பிறகு எலிசாவைத்தான் கர்த்தர் அடுத்த பெரிய தீர்க்கதரிசியாகத் தேர்ந்தெடுத்துள்ளார் என்பதை அங்கிருந்த மற்ற தீர்க்கதரிசிகளின் புத்திரர்களும், இஸ்ரயேல் மக்களும் தெளிவாகப் புரிந்துகொள்ளவும், எலியாவுக்கு இருந்த அதே தெய்வீக வல்லமை எலிசாவுக்கும் தொடர்ந்ததையும் இந்த நிகழ்வு உறுதிப்படுத்தியதாகவும் இருந்தது.

பிள்ளைகளே! நாம் தொழுதுகொள்ளும் பிதாவானவர் மிகவும் வல்லமை நிறைந்தவர், அவருக்கு நிகர் யாருமில்லை. நீங்கள் பார்க்கும் இந்த உலகம் அண்டசாரங்களையும் தனது வார்த்தையினாலே உண்டாக்கினார். வல்லமையும், மகத்துவமும், பாராக்கிரமுள்ள கர்த்தர் அவர். அவருக்கு உகந்த, பிரியமான பிள்ளைகளாகவும் இருக்கிற நாம் மிகவும் பாக்கியவான். எனவே, அவருக்கு பிரியமான காரியத்தை செய்யவும், நமக்கு இருக்கிற பொறுப்புகளை நிறைவேற்றுகிற பிள்ளைகளாகவும் வாழ கர்த்தர் கிருபை செய்வாராக.

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 8:17**

"என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்."

– சகோ. ஜான் செல்லையா

## சாலமோனின் ஞானம்

செல்லப்பிள்ளைகளா! அனைவரும் கர்த்தருக்குள் நலமாக இருக்கின்றீர்களா? கர்த்தருடைய நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். பரிசுத்த கர்த்தர் தாமே உங்கள் அனைவருடனும் இருந்து உங்களை ஆசீர்வதிப்பாராக.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் இஸ்ரயேல் நாட்டை ஆட்சி செய்த மிகப்பெரிய அரசர்களில் ஒருவராக சாலமோன் இருந்தார். இவர் தாவீது ராஜாவின் மகன் ஆவார். சாலமோன் தனது செல்வத்திற்காக மாத்திரம் அல்ல, தனது ஞானத்திற்காகவும் உலகம் முழுவதும் புகழ் பெற்றவர் ஆவார்.

ஒருநாள் பரிசுத்த கர்த்தர் சாலமோனிடம் கனவில் தோன்றி 'நான் உனக்கு என்ன கொடுக்க வேண்டும்?' என்று கேட்டார். சாலமோன் நீடித்த ஆயுளையோ, செல்வத்தையோ, அதிகாரத்தையோ கேட்கவில்லை. அதற்கு பதிலாக, மக்களை நியாயமாக ஆளுவதற்கு ஞானம் வேண்டும் என்று கேட்டார். சாலமோனின் இந்த வேண்டுகோள் கர்த்தருக்கு மிகவும் பிரியமானதாக இருந்தது. எனவே கர்த்தர் அவருக்கு மிகுந்த



ஞானத்தையும், அறிவையும், புரிந்துகொள்ளும் திறனையும் கொடுத்தார். அதோடு செல்வமும், கீர்த்தியும் வழங்கினார். அருமையான செல்லப் பிள்ளைங்களா! கர்த்தரிடம் எதை முதலாவது கேட்க வேண்டும் என்பதற்கு சாலமோன் ஒரு சிறந்த உதாரணம். செல்வம், அதிகாரம் இவை எல்லாவற்றையும் விட ஞானமே சிறந்தது. கர்த்தருடைய பிள்ளைகள் ஞானமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று கர்த்தர் நினைக்கிறார்.

சாலமோனின் ஞானத்தை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்ச்சி மிகவும் பிரபலமானது. இரண்டு பெண்கள் ஒரே குழந்தையை தங்களுடையது என்று கூறி ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்து, நியாயம் விசாரிக்கும்படியாக சாலமோனிடம் வந்தார்கள். உண்மையான தாய் யார் என்பதை அறிய சாலமோன் ஒரு புத்திசாலித்தனமான தீர்ப்பை வழங்கினார். குழந்தையை இரண்டாகப் பிரித்து இருவருக்கும் கொடுக்கலாம் என்றார். உடனே குழந்தையின் உண்மையான தாய். 'குழந்தையை உயிரோடு மற்ற பெண்ணுக்கே கொடுத்துவிடுங்கள்' என்றாள். இதனால் சாலமோன் உண்மையான தாயைக் கண்டுபிடித்தார். கர்த்தர் அருளிய ஞானம் எப்படி பயன் தருகின்றது பார்த்தீர்களா?

வேதாகமத்தில் நாம் வாசிக்கும் நீதிமொழிகள் சாலமோனால் எழுதப்பட்டது. ஒரு மனிதன் சரியான மற்றும் ஒழுக்கமுள்ள வாழ்க்கை வாழ்வதற்கான வழிகாட்டுதல்களை நமக்கு வழங்குகின்றது. கவனமாக உழைக்க வேண்டும், உண்மையாக பேசவேண்டும், கர்த்தரை மதிக்க வேண்டும், கர்த்தர் சொன்னதைபோல ஒழுக்கமுள்ள வாழ்க்கை வாழ வேண்டும் என்றும் "கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்றும் போதித்தார். ஆம் உண்மையான ஞானம் கர்த்தரிடத்திலிருந்து மாத்திரமே வருகிறது.

கர்த்தருக்குப் பிரியமான குழந்தைகளா? கர்த்தர் நம்மிடம் செல்வத்தை விட ஞானமே சிறந்தது என்று கற்றுத் தருக்கிறார் மற்றும் சாலமோனைப் போல கர்த்தரிடம் சரியானவற்றை வேண்டுதல் செய்ய வேண்டும். ஞானத்துடன் செயல்படுவது நம் வாழ்க்கையை உயர்த்தும். சாலமோனைப் போல நாமும் கர்த்தரிடம் ஞானத்தைப் பெற்றுக்கொண்டு மற்ற மக்களுக்கு உதவும் நல்ல குழந்தைகளாக வளருங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 2:10**

"ஞானம் உன் இருதயத்தில் பிரவேசித்து, அறிவு உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்"

– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்

## அமத்சியா ராஜாவின் நல்ல ஆட்சி

(2நாளாகமம் 25)

ஹாய்! குட்டீஸ் எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்? நல்லாயிருக்கீங்களா? இபபக்கூட அமத்சியா ராஜாவின் நல்ல ஆட்சியைப் பற்றியும், அதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடத்தையும் கற்றுக்கொள்வோம்.

குட்டீஸ், ரொம்ப வருஷத்துக்கு முன்னாடி அமத்சியா அப்படின்னு ஒரு குட்டி ராஜா இருந்தாரு, அவரு ரொம்ப நல்ல ராஜா.

ஒருநாள் அமத்சியா ராஜாவுக்கு ஒரு பெரிய கஷ்டம் வந்துச்சு, என்ன தெரியுமா!

அவரோடே சண்டைபோட நிறையபேர் வந்தாங்க, ராஜாவுக்குப் பயமா இருந்துச்சு, ஐயோ! நான் எப்படி ஜெயிக்கப் போறேன்? அப்படின்னு நினைச்சாரு.

**தாத்தா சொன்ன குட் அட்வைஸ் :**

அப்ப ஒரு நல்ல தாத்தா (தீர்க்கதரிசி) ராஜாக்கிட்ட வந்தாரு, வந்து ராஜா நீங்க பயப்படாதீங்க! கடவுள் உங்களுக்கு துணையா இருக்காரு. கடவுள் பேச்சைக் கேட்டா, நீங்க ஈஸியா ஜெயிச்சிடலாம் அப்படின்னு சொன்னாரு.

**ராஜா செய்த சமத்து காரியம்:**

நம்ம அமத்சியா ராஜா ரொம்ப சமத்து குட்டி! அந்த தாத்தா சொன்ன பேச்சை அப்படியே கேட்டாரு, சரிங்க தாத்தா, நான் கடவுள் பேச்சை மாத்திரம் கேட்கிறேன் அப்படின்னு சொன்னாரு.

அப்புறம் என்ன ஆச்சு? கடவுள் ராஜாவுக்குப் பெரிய ஹெல்ப் (உதவி) பண்ணிணாரு. ராஜா ரொம்ப சுலபமாக ஜெயிச்சுட்டாரு! எல்லாரும் கைத்தட்டி அமத்தியா ராஜா குட்பாய்! அப்படின்னு பாராட்டினாங்க.



**பிள்ளைகளா! இதிலிருந்து என்ன பாடம் நமக்கு:**

பெரியவங்க பேச்சைத் தட்டாம கேட்கணும்!

அமத்தியா ராஜா எப்படி அந்த தாத்தா (தீர்க்கதரிசி) சொன்ன நல்லப் பேச்சை உடனே கேட்டாரோ, அதேபோல நீங்களும் அம்மா, அப்பா சொல்ற பேச்சை சமத்தா கேட்கணும்.

அம்மா சாப்பிடணும், போனை வைன்னு சொன்னா உடனே வச்சிடணும். சமத்து பிள்ளையா பேச்சைக் கேட்டா, கடவுள் உங்களையும் ரொம்ப பெரிய ஆளா மாத்துவாரு.

கடவுள், அப்பா, அம்மா, ஆசிரியர், பெரியவர்கள் இவர்கள் பேச்சை தட்டாமல் கேட்கிற சமத்துப் பிள்ளைகளைத்தான் கடவுளுக்கு ரொம்பப் பிடிக்கும்! கீழ்ப்படிவீர்களா! கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம்: 1 சாமுவேல் 15:22**

"பலியைப் பார்க்கிலும் கீழ்படிதல்தான் உத்தமம்"

— சகோ. அன்பு ஏசுதாஸ்

## ஓராண்டில் திருமறையை வாசித்து முடிக்க....



## ஜூலை - 2026

| தேதி | காலை | மாலை |
|---|---|---|
| | **அப்போஸ்தலர்** | **யோபு** |
| 1. | 10:24-48 | 20,21 |
| 2. | 11 | 22-24 |
| 3. | 12 | 25-27 |
| 4. | 13:1-25 | 28,29 |
| 5. | 13:26-52 | 30,31 |
| 6. | 14 | 32,33 |
| 7. | 15:1-21 | 34,35 |
| 8. | 15:22-41 | 36,37 |
| 9. | 16:1-21 | 38-40 |
| 10. | 16:22-40 | 41,42 |
| | | **சங்கீதம்** |
| 11. | 17:1-15 | 1-3 |
| 12. | 17:16-34 | 4-6 |
| 13. | 18 | 7-9 |
| 14. | 19:1-20 | 10-12 |
| 15. | 19:21-41 | 13-15 |

| தேதி | காலை | மாலை |
|---|---|---|
| | **அப்போஸ்தலர்** | **சங்கீதம்** |
| 16. | 20:1-16 | 16,17 |
| 17. | 20:17-38 | 18,19 |
| 18. | 21:1-17 | 20-22 |
| 19. | 21:18-40 | 23-25 |
| 20. | 22 | 26-28 |
| 21. | 23:1-15 | 29,30 |
| 22. | 23:16-35 | 31,32 |
| 23. | 24 | 33,34 |
| 24. | 25 | 35,36 |
| 25. | 26 | 37-39 |
| 26. | 27:1-26 | 40-42 |
| 27. | 27:27-44 | 43-45 |
| 28. | 28 | 46-48 |
| | **ரோமர்** | |
| 29. | 1 | 49,50 |
| 30. | 2 | 51-53 |
| 31. | 3 | 54-56 |

★ கொடுக்கப்பட்டுள்ள வேதாகம பகுதிகளை வாசித்து முடித்தவுடன் அருகில் உள்ள கட்டத்தில் ☑ செய்யவும்..

**வேதாகமத்தை முறையாக கற்றுக்கொள்ள: 92 4421 4421, 92 4431 4431**

அடுத்த இதழில்

# ஜூன் மாத கேள்விகள்

(லூக்கா சுவிசேஷ புத்தகத்தில் இருந்து)



1) யாருடைய நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனின் நாட்களில் நடக்கும்?
2) இயேசு எப்படிப்பட்டவரோ என்று பார்க்க வகைதேடினவன் யார்?
3) பெத்பகே பெத்தானியா ஊர்கள் எந்த மலையருகே இருந்தன?
4) உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிறவர்கள் யார்?
5) விரோதிக்கிறவர்கள் என்ன செய்யக்கூடாத வாக்கை இயேசு தருவார்?
6) பொறுமையினால் எதை காத்துக்கொள்ள வேண்டும்?
7) சாத்தான் யாருக்குள்ளே புகுந்தான்?
8) பேதுருவிடம் எது ஒழிந்துபோகாதபடி இயேசு வேண்டிக் கொண்டார்?
9) எந்த இடத்தில் இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள்?
10) கர்த்தர் உயிர்த்தெழுந்து யாருக்கு தரிசனமானார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-07-2026**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

## சென்ற இதழின் பதில்கள்

| | |
|---|---|
| 1. லூக்கா 9:10 | 6. லூக்கா 15:7 |
| 2. லூக்கா 10:39 | 7. லூக்கா 16:8 |
| 3. லூக்கா 11:33 | 8. லூக்கா 16:13 |
| 4. லூக்கா 11:52 | 9. லூக்கா 17:1 |
| 5. லூக்கா 14:33,34 | 10. லூக்கா 17:5 |

## சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1) Mrs. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
2) R. ஞானசிரோன்மணி - மதுரை
3) C. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்
4) Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
5) J.V. சுந்தரபாய் வில்லியம் - சேலம்
6) Mrs. A. இமல்டா சுந்தர்சிங் - ஈரோடு
7) A. டேவிட் ஜெயசந்திரன் - மதுரை
8) Mrs. பெட்ரீஷியா டேவிட் - சேலம்
9) S.G. சேகர் - ராணிபேட்டை
10) J. ஜான்சி - ஆனைமலை
11) Mr. தாமஸ் ராபின்சிங் - பெரம்பலூர்
12) Mrs. பிளாரன்ஸ் முத்தையா - மதுரை
13) T. பால்வின் - சாந்தபுரம்
14) Y. ஜெயசுதா பொன்செல்வி - சென்னை
15) M.S. ஜேம்ஸ் - திண்டுக்கல்
16) Mrs.P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
17) Mrs. ஹெலன் திலக் - தூத்துக்குடி
18) Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் - தூத்துக்குடி
19) Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
20) A. லலிதா - புதுக்கோட்டை
21) J. கிறிஸ்டோபர் தாஸ் - நாகர்கோயில்
22) Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் - நெல்லை
23) J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் - மதுரை
24) N.V. அஜிதா சுபின் - மாத்தாண்டம்
25) P.S. ருக்மணி - ஈரோடு
26) A. அனிதா ஸ்டாலின் - தரங்கை
27) S. கார்த்திக் - கரூர்
28) Mrs. J. பூங்கொடி ரவி - முத்தூர்
29) Mrs. இந்திரா பாண்டி - மதுரை
30) S. பேபி சந்தோஷ்குமார் - தங்கமேடு
31) Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
32) R. சரோஜா - தென்கலம்
33) A. அரவிந்த் - மதுரை
34) Dr. ஆட்லின் ஆனந்தன் - மதுரை
35) Mrs. C. வள்ளி சிதம்பரம் - கரூர்
36) P. ரேச்சல் ஜானிமா - நெல்லை
37) Mrs. ஹெப்ஸிபா தாமஸ் - படப்பை
38) A. ரோஸ்மேரி - சென்னை
39) Mrs. பெரில் பாஸ்கர் - படப்பை
40) N. ஞானசுந்தரி நாகராஜன் - பாளையங்கோட்டை
41) S. டேவிட் சாந்தகுமார் - செங்கோட்டை
42) Mrs. சூரிய பிரியா - மதுரை
43) Mrs.D. குளோரி திலகவதி - சென்னை
44) S. பாக்கியராஜம் - மதுரை
45) Mr. டேவிட் ராஜ் - அனவரதநல்லூர்
46) N. ஜான் செல்லையா - மதுரை
47) J. ஜெயராணி ஜான் - மதுரை
48) Mrs. ராணி குமரன் - கரூர்
49) Mr. தாமஸ் ராபின்சிங் - பெரம்பலூர்
50) Mrs. தேவி ராஜாசிங் - திருப்பூர்
51) M. அன்பழகன் - தங்கமேடு
52) G. ஏஞ்சலம்மாள் - மதுரை
53) Mrs. M. ஈஸ்வரி முருகன் - கரூர்
54) M. ராஜா - கரூர்
55) A. கார்பஸ் பிலேமோன் - மதுரை
56) S. ஜெபமணி - தென்காசி
57) T. பால்வின் - கன்னியாகுமரி
58) S. ஷீபா ஞானவின்சா - டோனாவூர்
59) Mrs. பியூலா ஜேசுராஜன் - புதுவை

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**


Place of Publication : 45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 📖 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th June 2026
Posted at Arasaradi HPO on 10th & 11th June 2026

# கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்



அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்





## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH




AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers